


# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லா இலாஹ இல்லல்லாஃ
முஹம்மதுறஸூலுல்லாஃ"

புத். 1. { அறப் ஹூ 1311 துல்ஹஜ்ஜுமீ 15உ செ.க. / இங்கிலிஷ் ஹூ 1894 ஜூன் மீ 19உ செ.கி. } இல. 9.

## தேவபயம் அதுவே ஜயம்.

மகத்தான ஆண்டவன் ஆயிர நாமத்தோடுங் கூடிய அல்லாஃ என்னும் திரு நாம முடையவன், அவனது பரிசுத்த வாக்கியமாகிய "குர் ஆன் சரீபில், "யாவனொருவன் அல்லாஹூதஆலாவைப்பயந்து (வழிபட்டு) நடந்தால் அவனுக்கு அல்லாஹூதஆலா தீங்கை விட்டும் ஈடேற்றமாகுந் தலத்திலாக்கி, அவன் நினையாத புறத்தால் இரணமும் கொடுப்பான்" என்று திருவுளம்பற்றி யிருக்கிறான். இதன் தாற்பரியமாவது, அல்லாஃவுக்குப் பயந்து அவன் ஏவிய கற்பனையை எடுத்தும், அவன் விலகிய விலகலைத் தடுத்தும் வழிபட்டு நடக்கிறவன் சகல தீங்குகளினுங் காக்கப்பட்டும், அவன் ஒருக்காலும் நாடி அறிந்திராத புறத்தால் சீவனத்தைப் பெற்றுங் கொள்வான் என்பதுவே. அல்லாஃவைப் பயப்படுங்கள் என்கிறது அல்லாஃவுக்கு வழிப்பட்டு நடக்கவேண்டும் என்பதுவே கருத்தாம். அவன் எங்கள் இரட்சக நாயகருக்கு இறக்கிவைத்த பரிசுத்த "புர்க்கான்" என்னும் வேதத்தில் கூறிய விதிப்படி அல்லாஃவை விசுவதித்து அவனது நபிகள் நாயகத்தையும் வேதத்

தையும் உண்மை கொண்டு, அவன் விலகியதை விட்டு அவன் ஏவியதை தொட்டு, அவனுக்கு மாறு செய்வதை மறந்து, அவனை தியானஞ் செய்வதை நினைந்து, அவனைப் புகழ்ந்து துதிசெய்திருக்க வேண்டுமென்பதும் அல்லாஹ்வுக்குப் பயந்து நடக்க வேண்டுமென்பதற்குப் பொருளாகும்.

அல்லாஹ்வுக்குப் பயப்படாமல் வெளி கோலத்தில் வணக்கக்காரன் என்று இருது பாராட்டித் திரிகிறவர்கள் ஒரு பலனையும் பெறப் போகிறதில்லை. வணக்கஞ் செய்வதை உள்ளச்சத்தோடு செய்தால் புண்ணியம் கிடைக்கும். மறுமையில் நாயனிடத்தால் பேறு பெறுவது மாத்திரமா? இம்மையிலும் சௌக்கியத்தையடைகிறான். இதற்கு உதாரணமாக ஒரு சரித்திரத்தைப் பேசுவோம்.

ஒரு கப்பலில் சில சனங்கள் சமுத்திரத்தில் யாத்திரை செய்யும்போது, அந்தக்கடலில் ஒரு மனிதன் ஜலத்தின் மேலே வெளியாகி "என்னிடத்தில் ஒரு வாக்கியமுண்டு அதை நான் ஆயிரம் தங்கக்காசுக்கு விற்பேன்" என்று சொன்னார். அப்போது கப்பலிலிருந்தவர்களி லொரு மனிதன் "இதோ ஆயிரம் தங்கக்காசு இருக்கிறது எடும்" என்றார். அப்போது அந்தக் கடலில் நின்ற மனிதனார் "உமது காசைக் கடலில் எறியும்" என்றார், அவர் சொன்னபடி எறியவே, அதன்பிறகு அந்த மனிதன் "எவனொருவன் அல்லாஹ்வைப் பயந்து வழிப்பட்டு நடந்தானோ அவனுக்கு அல்லாஹுதஆலா வருத்தங்களை விட்டுங் கார்த்து ஈடேற்றமாகிய தலத்திலாக்கி, அவன் எண்ணாத புறத்தால் இரணமும் கொடுப்பான்" என்னும் தேவ வாக்கியத்தைப் பாடமிட்டுக்கொள் என்று சொல்லிவிட்டு மறைந்து விட்டார். அவர் மறைந்தட்சணத்திலே அந்தக்கப்பல் உடைந்து, அவர்கள் நாச மடைந்தார்கள்; ஆனால், இந்த மனிதன் மாத்திரம் ஒரு பலகையில் தொத்திக்கொண்டு கடலில் கண்ட மனிதன் சொல்லிக் கொடுத்த தேவ வாக்கியத்தைப் படித்துக்கொண்டிருந்தார். அப்போது அவர் தொத்தியிருந்த பலகை அலை மோதலினால் தள்ளுண்டு ஒரு தீவின் கரையில் கொண்டுபோய் ஒதுக்கப்பட்டது. அங்கே இவர் கரையேறிக் களைதீர்ந்து நிற்கும்போது சிறந்த வடிவமைந்த ஓர் பெண்ணைக் கண்டார். அவளைக்கண்டு அவளுடைய விசளங்களைக்குறித்துக் கேட்டார். அப்போது அவள் நான் இன்ன தேசத்திலுள்ளவள், என்னை இந்தக் கடலினுள்ளிருக்கிற ஒரு பூதம் கொண்டுவந்து வைத்துவிட்டுக் கடலில் புகுந்திருக்கிறது. அது கடலிலிருந்து தினந்தோறும் அது குறித்த நேரத்தில் வெளியிலிறங்கி என்னிடம் வந்து என்னை அதோடு சேர்ந்தணையும்படி வலோற்காரம்பண்ணி அழைக்குது. என்னுடைய நாயன் அது அழைக்குங் கெட்ட கிரியையை விட்டும் என்னைக் காப்பாற்றி வருகிறான் என்று சொன்னாள். அப்போது அந்த மனிதன், ஏ! பெண்ணே! நீ என்னை

அந்தப் பூதங் காணுத தலத்திலும், பூதத்தை நான் காணக்கூடிய தலத்திலுங் கூட்டிப்போய் வையென்று சொன்னர். அப்போது அந்த மனிதனே அவள் தன்னுடன் வரச்சொல்லி அழைத்துக் கொண்டுபோய் அங்குள்ள ஒரு கெவியினிடத்தில் மறைந்திருக்கும்படி வைத்தாள். அதிலிருந்து பார்த்தால் அந்தப் பூதம் வெளிவருவது தெரிய வரும். அந்தக் கெவி யிலிருக்கும்போது பூதம் கடலிலிருந்து, வெளியில் வருவதைக் கண்டு, முன்னர் கடலில் கண்ட கடல் மனுஷன் சொல்லிக் கொடுத்த தேவ வாக்கியத்தை மந்திரித்தார். அப்போது அந்தப் பூதம் நெருப்பினுல் கரிக்கப்பட்ட வாறு எரிந்து போயிற்று. இதைக் கண்ட அந்தப்பெண் சந்தோஷமடைந்து ஆநந்த சாகரத்தில் மூழ்கினுள். அதன் பிறகு அந்தப்பெண் இந்த மனுஷனுடைய கையைப் பிடித்துக் கொண்டு ஒரு மலைக் கெபி யளவில் போனுள். அந்தக் கெபிக்குள்ளே அளவறுந்த முத்து மாணிக்க நவரத்தினுதிகள் நிறைந்திருந்தன. அதைக் கண் டட்சணமே அவாக்கொண்டு அள்ளி எடுக்கப் பார்த்தார். ஆ! மனுஷனே! கொஞ்சம் பொறும், நாம் இவைகளே யெடுத்ததினுல் யாதொரு பிரயோசனம் பெற வழியில்லை. நாங்கள் இந்தக் கடலைக் கடந்து எங்கள் தேசஞ்சேருகிறதற்குரிய வழியில்லை. ஆதலால் கப்பல்கள் யாத்திரை போவதைப் பார்த்து அதி லேறிப்போய் எங்கள் தேசஞ்சேர வழி பார்ப்போம் என்று சொன்னுள். அவள் சொல்லிய வார்த்தை முடிய முன்னர் கடலில் ஓர் கப்பல் யாத்திரை யாவதைக் கண்டார். உடனே ஒரு வெள்ளைச் சீலையால் துவஜக் குறி காட்டும்படி சொன்னுள். அங்ஙனந் துவஜங் காட்டவே கப்பற் காரர்கள் அந்தத்தீவில் சனங்க ளிருக்கின்றுர்கள் என்றறிந்து கப்பலைத் தீவுக்கருகில் பிடித்து கரைக்கிறங்கி வந்தார்கள். வந்தவர்களே அழைத்துப்போய் அந்த முத்து மாணிக்கங்கள் இருந்த பொதும்பிலிருந்து அவர் அவர்களுக்கு வேண்டிய மட்டில் எல்லோரும் வாரிக் கட்டிக் கொண்டு திரும்பக் கப்பலுக்கு வந்து இவ்விருவர்களேயும் யேற்றிக்கொண்டு பயணப் பட்டார்கள். கப்பலில் போய் அவரவர் தேசங்களில் யாதொரு இடையூறின்றிச் சேர்ந்து வாழ்ந்தார்களாம்.

இதோ மேலே காட்டிய சரிதையை வாசிக்கும் மித்திரர்களே! அல்லாஹ்வைப் பயந்து அவனுக்கு வழிப்பட்டு நடக்கும் பிரசைகள் அடைந்த ஜெயத்தைப் பாருங்கள். எவனெருவன் நாயனே வழிபட்டுப் பய பக்தியாய் நடந்தானே அவனும் இங்ஙனமே ஜெயமடைவான் என்பதற்கு இதுவே திருஷ்டாந்தமாம்.

ஆகையால், எமது மித்திரர்களே! எம்மையும் உங்களேயும் இம்மை மறுமை என்ற இருலோகத்திலும் ஜெயம் பெறும்படி பாக்கியவான்களாக்கிவைக்கின்ற அல்லாஹுதஆலாவுக்கே புகழடங்கலு முரியன. அந்தப்புகழுக்

குரிய ஆண்டவன் உமக்கும் எமக்கு முன்னுள்ளவர்களுக்கும் ஒரு உபதேசத்தை உபதேசித்தான். அதோ அற்புதங்களில் மகா அற்புதமும், நிரையாதனைகளை விட்டும் இரட்சிக்கின்ற பாவ நிவாரண ஔடதமும், தேவ கிருபா கடாட்சத்தையும் வெற்றியாகிய ஜெயத்தையும் சுவன பாக்கியத்தையுங்கொடுக்கின்றஉபதேசமுமாம். அதாகிறது "தக்வா" அல்லாவுக்குப் பயந்து வழிப்பட்டு ஏவலை யெடுத்து விலகலைத் தவிழ்ந்து நடப்பதுவே. இந்தப் பிடி கயற்றை எம்மில் தரிபடுத்தி வைக்கும்படி அவனைக் கெஞ்சி யிரக்கின்றோம்.

## உபதேச தீபிகை.

சங்கைபோந்த நாயகம் சுல்த்தான் இபுறாகீம் இப்னு அத்ஹம் அவர்களுக்கு அல்லாஹுதஆலா உடைய கிருபா கடாட்ச முண்டாவதாக, அவர்கள் கூறியதாக அறபு கித்தாபு ஒன்றில் கூறப்பட்ட விசளமொன்றை இங்கே எழுதுகிறோம். சொல்லப்பட்ட நாயகம் இபுறாகீம் இப்னு அத்ஹம் கூறுகின்றார்கள். அதாவது:—

நான் லுப்பான் என்று சொல்லப்பட்ட பருவதத்தில் அல்லாஹுதஆலா உடைய அடவர்கள் என்று பெயர் கீர்த்தியா யழைக்கப்பட்ட மனுஷர்களில் அநிகப் பற்றுள்ளோரைத் தோழமை பிடித்திருந்தேன். எனக்கு அவர்கள் "நீர் இப்பிரபஞ்ச புத்திரர்களிடத்திற்கு திரும்பச் சென்றீரானால் நாலுவாக்கியங்களை அவர்களுக்குப் போதியும்"என்றுஉபதேசித்தார்கள். அவர்கள் சொன்ன நான்கு உபதேச வாக்கியங்களுமாவன:—1-வது. எவனொருவன் தீனை மிகுதப் படுத்துகிறானோ அவன் வணக்கத்தினுடைய இன்பத்தைக் காணமாட்டான். 2-வது. எவனொருவன் நித்திரையை மிகுதப் படுத்துகிறானோ அவன் தன்னுடைய சீவிய காலத்தில் (பாக்கிய) பொலிவைக் காணமாட்டான். 3-வது. எவனொருவன் மனுஷருடைய பொருத்தத்தைத் தேடுகின்றானோ அவன் அல்லாஹுதஆலா உடைய பொருத்தத்தைக் காணமாட்டான். (பெற்றுக் கொள்ள மாட்டான்.) 4-வது. எவனொருவன் வீண் வார்த்தை பேசுகிறதையும் புறம்பேசுகிறதையும் மிகுதப் படுத்துகிறானோ அவன் இஸ்லாம் மார்க்கத்தின் பேரில் இப்பிரபஞ்சத்தால் பிரப்பட மாட்டான்.

இதோ மேலே வரையப்பட்ட நான்கு உபதேசங்களுமாகிறது பாபிஷ்ட படுகுழிகளில் வீழ்ந்து மோசம்பெறாது காக்கத்தக்க தீபிகையா யிருக்கின்றது. ஆகையினால், இவைகளை நன்கு கவனித்து உறுதிகொண்டு தீங்கைத் தவிழ்ந்து நலவை யுவந்து நடந்துகொள்வது இஸ்லாம் மித்திரர்களாகிய எமக்குக்கடமையாயிருக்கின்றது.

மனு முதல் மற்ற சர்வ சீவகோடிகளையும் படைத்து அவைகட்கு நல்

வினை தீவினைகளை சங்கற்பித்து உணவு கொடுத்து ஆதரித்து ஆளும் அல்லாஃவாகிறவன் மனோவாக்குக்கு எட்டாத அதீதியானவன், எளிதில் அறிவதற்கு அரியவன், அவனை வணங்காதவர்களை பாழ் நரகத்து அக்கினியிற் கிடத்தி யாதனை யனுபவிக்கச் செய்பவன், அவனை வணங்கினவர்களை மோக்ஷத்தில் சதாநந்த இன்பம் அனுபவிக்கச் செய்பவன், சகல புகழுக்கும் வணக்கத்திற்கும் அவனே உரியவன், அவன் கருணை மிகுத்து, தீர்க்கத்தரிசிகளை வருத்து, அவர்களிற் சிலருக்கு வேதப்பிர கரணங்களையும் சிலருக்கு வேதங்களையும் கொடுத்து, தீர்க்கதரிசிகளுக் கெல்லாம் நாயகரும் முன்னுள்ள வேதசாரங்களை யெல்லாம் பொதிந்த இஸ்லாம் என்னும் மார்க்காதிபரும் ஜகத சர்க்குருவும், அகில ரட்சகருமாகிய முஹம்மது நபி அவர்களுக்கே கிருணையு மீடேற்ற வரமுமுண்டாவதாக. அங்ஙனமே அவர்களின் பரிசுத்த தோழர் முதலிய மத நிபுணர்களுக்குமாகுக. அந்த நபியின் பொருட்டால் எங்கள் ஹிருதயத்தில் விசுவாசம், தெய்வ பக்தி, அன்பு தங்கக் கிருபை செய்தருள். ஐக்கியப்படுத்தியருள். எங்களுக்குள்ளே அந்நியோந்நிய சம்பத்தத்தை பலப்படுத்தியருள். பணத்துக்காக வணக்கத்தைக் குழப்பி ஒற்றுமையைக்கலைத்து பல சாதிகளும் நிந்திக்கத் திருநாள் கொண்டாட விடாது இருநாளில் விபரீதப்படுத்த முயற்சித்த கல்வியைத்தொட்டு விட்ட துஷ்ட நிஷ்டூர முட்டாள் லெப்பைமார்களின் கலையில் அகப்பட்டு மோசம்போகாது காப்பாற்றியருள். அறிவீனருக்கு அறிவையும், அஞ்ஞானிகளுக்கு ஞானத்தையும், பாபத்தில் துயரப்படுவோர்க்கு ஆறுதலையும் பிழை பொறுக்குதலையும் இரட்சிப்பையுங்கொடுத்தருள் நாயனே உன்னை வேண்டுகிறோம்.

## நான்கு இமாம்கள் சரித்திர சூசனம்.

[சென்ற 7 மிலக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி.]

நபிகள் நாயகத்திற்கு பிற்காலத்தில் நபியுடைய வேதானுசாரிகளில் ஒரு சோதி பிரகாசித்திலங்கும், அதற்கு அபாஹனிபா என்று சொல்லப்படும்என்றுமுன்னுள்ள "தவ்ருத்து" என்னும் வேதத்திற் கண்டிருப்பதாக கஉபுல் அக்பார் றளியல்லாஹு அன்ஹு கூறியிருக்கின்றார்கள்.

என்னுடைய மார்க்கானுசாரிகளில் ஒருவர் வருவார், அவர் நாமம் நுஉமான், அவரை அழைக்கும் பெயர் அபூஹனீபா, அவர் என்னுடைய மார்க்க அனுசாரிகளுக்கிடையில் இலங்கும் தீபமாயிருப்பார் என்று நபிகள் நாயகம் திருவுளம்பற்றியதாகவும், இன்னும், நபி நாயகம் என்னை யழைத்து அனஸே! அந்த அபாஹனீபாவை நீர் எதிர்க் கொண்டீராகில் அவருக்கு என் ஸலாம் சொல்லி என்னுடைய

அமானத்தைக் கொடும் என்றும், அந்த அமானம் நபிகள் நாயகம் அருந்திய ஈத்தம் பழத்தில் ஒரு சுளை என்றும், இன்னொரு சொல்லாகிறது அந்த அமானம் நபிகள் நாயகம் தங்கள் கற்பூர வாடை கமழும் வாயிலிருந்து அனஸுடைய வாயில் உமிழ்ந்த பரிசுத்த உமிழ்நீரை அனஸு ஒரு புடைவையில் ஊட்டி உலத்தி, அதை பதனிட்டுக்கொண்டிருந்து இமாம் அபூஹனீபா றளியல்லாஹு அன்ஹுவை எத்தியபோது அந்த அமானிதத்தை ஒப்புவிக்கவே, இமாம் அவர்கள் அதை உட்கொண்ட உடனே அவர்களின் ஹிருதயம் என்னும் பூமியில் அறிவென்னும் நதிகளுண்டாகி அதனால் பூராயம் என்னும் வாய்க்கால் வரம்பினால் வணக்கம், தவம், தியானம் என்னும் விருட்சங்களுண்டாகித் தளிர்த்தது. நறுக்கம், நீதிநெறி, ஞானம் என்னும் இலைகள், பூக்கள், கனிகள் ஆகியவைகளுண்டாகி அதனால் சகலரும் இன்பம்பெறுவார்கள் என்று அனஸு இப்னுமாலிக்கு றளியல்லாஹு அன்ஹு நபிகள் நாயகம் திருவாய் மலர்ந்தருளியதாக, கூறியிருக்கின்றார்கள்.

இன்னும், நான் ஆதம் அலைஹிஸ்ஸலாமுக்கு பிள்ளையாயிருந்ததால் என்னைக்கொண்டு தேவ தூதர்களைப் பெருமை பாராட்டினார்கள், என்னுடைய மார்க்கானுசாரிகளில் வரும் நுஉமான் அபூஹனீபாவைக்கொண்டு பெருமையடிக்கிறேன் என்றும், என்னை விரும்பினவன் அவரை விரும்புவான், என்னை வெறுத்தவன் அவரை வெறுப்பான், என்னைக் கோபங்கொண்டவன் அவரை கோபங்கொள்வான் என்றும் நபிகள் நாயகம் முன்னறிக்கையாய்த் திருவுளம்பற்றியதாக ஓர் அதீத வாக்கியம் சர்ஹு அபில்லைதில் வருகிறது.

நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களினும் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களினும் மார்க்கானுசாரிகளில் ஒருவர் அபூஹனீபா நாயகம் அவர்களைப்போலிருந்தால் அவர்களில் ஒருவரும் எகூதிகளாகவும், நஸாறாணிகளாகவும் மாறமாட்டார்கள். என்று ஸஹ்லிப்னு அப்துல்லாஹி துஸ்தரி றஹ்மதுல்லாஹி பேசிவருகிறார்கள்.

நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கடைசி காலத்தில் இவ்வுலகத்திற்கு வானலோகத்திலிருந்து வருவார்கள், வந்து கிறிஸ்தவர்கள் வேதமென்று நம்பி மோசம்போயிருக்கிற கிறிஸ்து மதத்துக்கு மாறாகப் பிரசங்கஞ்செய்து இஸ்லாமில் குணப்படுத்துவார்கள், கோயில்களில் வைத்திருக்கின்ற சிலுவைகளை உடைத்தெறிவார்கள், அவர்களைக்கொண்டு இஸ்லாமிலானவர்களையும் இமாம்கள் சிரேட்டர் அபூஹனீபா நாயகம் அவர்களின் மதுஹபு என்னும் மார்க்க வழியிலே நடத்துவார்கள்.

மகத்துவம்பொருந்திய மகாத்துமாக்களாகிய இபுறாகீம் இப்னு அத்ஹம் சகீகுல்பல்கிய்யி மஉறூபுல் கர்கிய்யி, அபீயஸீ துல்பீஸ்தாமி புலைலுப்னு

இயாளு, தாஊதுத்தாயீ, அபூஹாமிதுல்லபாக், கலபிப்னு ஐயூபு, அப்துல்லாஹிப்னுல் முபாரக், வகீயிப்னு ஜர்ராகு, அபூபக்றுல்வர்ராக், (றளியல்லாஹு அன்ஹும்) முதலிய இன்னும் அனேகர்களும் இமாம் அபூஹனீபா நாயகத்தின் மதுஹபைப் பின்பற்றி நடந்து பலன் பெற்றார்கள்.

பூமியை மலைகளைக்கொண்டு ஸ்திரமாய்த் தரிபடுத்தியதுபோல ஹனீபிய்யத்தான மார்க்கத்தை அபூஅனீபாவின் அறிவென்னும் முளைகளால் தரிபடுத்தப் பட்டதென்று சமஹ்சரீ றஹ்மஹுல்லாஹி கூறுகின்றார்கள்.

இன்னும் வரும்.

## சீதனம்.

சீதனம், அதாவது ஸ்திரீ உடைய பணம் என்பது பொருளாம். பெண்ணின் இடத்தால் ஒரு புருஷன் பெற்றுக்கொள்ளும் பணங் காசு முதலியவற்றையே முகவுரை வசனங் குறிக்கின்றது. இவ்வூர்களில் எங்கள் முஸ்லிம்களுக் கிடையில் உண்டாயிருக்கிற அபரிமிதச் செலவுகளில் இதுவுமொன்றாயிருப்பதால் இதைப்பற்றிச் சிலதை மாத்திரம் இங்கே கொஞ்சம் பேசுவோம். சாவகாசங் கிடைத்தபடி பின்னுஞ் சிலபோது பேசிவர நாடுவோம். நாயன் நாட்டத்தை நடத்தி யருள்வானாக.

இலங்கையிற் சில ஊர்களிலே சீதனங் கொடுப்பது நாளுக்கு நாளாய்த் தொகை யதிகப்பட்டு வருகின்றது, ஒரு தகுதியான மனிதன் ஒரு பெண்பிள்ளையைப் பெற்றவுடனே தன்னுடைய தகுதிக்குச் சரியான ஒரு தொகைப் பணத்துக்குக் கடனாளியாய் விடுவான். அத்தொகையைத் தன்னுடைய கணக்குப் புத்தகத்திலே தான் கடன் பட்டதாக எழுதிவிட வேண்டியதுதான். நாலு பெண்பிள்ளைகளைப் பெற்றால், அதை நாலாகப் பெருக்கிக்கொள்ள வேண்டியதே. இப்படி உலகத்துக்கு அழகாகவும் செல்வமாகவுமிருக்கின்ற பிள்ளைகள் பாரமுடைய அடையத் தகப்பன் அப்றுன் கொண்டவனாகப் போகிறான். இப்பிள்ளைகளுக்குச் சீதனங்கொடுப்பதெப்படியென்ற கவனத்தாற் பதறுவான். தன் சுகத்தைப் பாரான். தன் பிள்ளைகளைப் படிப்பிக்க நினையான். அவர்களை நல்லொழுக்கங்களிலே செல்லும்படி தெண்டியான். இபாதத்தைத் தானும் விட்டுவிடுவான். சீதனங் கேட்பார்களே கொடுக்கவேண்டுமே என்ற எண்ணமே அவன் மனதிலே குடிகொண்டுவிடும். சீதனங் கொடுப்பது நிதானமான தொகையாயிருந்தால், இவ்விதமான வருத்தம் நேரிடாது. ஆனாலும், தாய் தகப்பன்மார் பெண்பிள்ளைகளுக்குக் கல்வியறிவுகளையும் பெண்களுக்குரிய கைவேலைகளையும் படிப்பித்து வரும்போது அப்பிள்ளைகள் நாளுக்கு நாளாகத் தேறிவருதலைக் காணும் பிதா மாதாக்களின் மனச்சந்தோஷமுடைய இடமாயிருக்கின்றது. தமது பிள்ளைகள் மதுரமாய்க் குறுஆனை யோதவும், ஒரு பைத்தை அல்லது ஒரு பாட்டைப் பாடவுங் கேட்கின்ற மாதா பிதாக்களுக்கு இன்பங் கொடுக்கும் வேறாக முண்டோ! தம்முடைய சிறு பெண்பிள்ளைகள் அழகான ஒரு பூவேலைசெய்து

கொண்டுவந்து காட்டினால், அதைப் பார்க்கிலும் அவர்களுடைய மனதை பிரீதி யடைவிக்கக்கூடிய பொருள் யாது! தமது பிள்ளைகள் ஒரு யுக்தியான வார்த்தை மொழிந்தால், அதைவிட வேறு இன்பமான கதை எது! இப்படிப் பிள்ளைகள் கல்வியிற் றேறிவர, மாதாப் பிதாக்களுடைய மனம் பூரிப்பதுமல்லாமல் அவர்களை நினைக்கும்போதெல்லாம் பெருமை கொள்ளக் கூடியதாயிருக்கும், இப்பிள்ளைகள் கன்னிப் பராயமாக அவர்களுடைய கல்விச் சமர்த்து நற்குணம் ஆகிய இவைகள் பிரஸ்தாபமாகி, வாலிபர்கள் இப்பெண்களைச் சீதனமதிகங் கிடையா திருந்தாலும் விவாகஞ் செய்ய மிகவும் விரும்புவார்கள். அறிவென்னுங் கிரீடத்தைப் பூண்டு சற்குணமென்னு மாபரணத்தைத் தரித்த இப்பெண்கள் எவர்களுடைய மனமும் பிரியமடையச் செய்வார்கள். இன்னுங் கல்வியுள்ள வாலிபர்கள் சீதனங் குறைவாயிருந்தாலும், அறிவும் சீர்திருத்தமு முள்ள பெண்களையே விரும்பித் தெரிந்து கொள்வார்கள். இப்படிப் பெண்பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு, நீங்கள் சீதனமாகக் கொடுக்கும் பணத்தொகையிற் பத்திலொரு பங்கு செலவு செய்தாற்போதும்.

இப்படியிருக்க இவ்வூர்களிலே இயல்புடையவர்கள் தாமும், தங்களுடைய பெண்பிள்ளைகளை ஒரு வீட்டின் முன்வாரத்தில் வைத்திருக்கும் பள்ளிக்கூடத்திலே சிலகாலத்துக்கனுப்பி நாலைந்து ஜுசு ஓதின வளவிலே பிள்ளைகள் பராயமாய் விட்டார்களென்று சமையலறைக் கனுப்பி விடுவார்கள். பின்பு அப்பிள்ளைகள் அடுப்படியிலிருக்கும் வேலைக் காரிகளுடனே சம்பாஷணைசெய்து வருவதால், அறிவும், தெளிவும், புத்தியும் அந்த வேலைக்காரிகளுக்குள்ள அளவாகவே யிருக்கும். பின்பு, அந்தப் பெண்கள் விவாகஞ்செய்து கொடுத்ததின்பின், தம்முடைய நாயகர்களோடு சம்பாஷணைசெய்யும்போது, சமயலைச் சேர்ந்த செய்திகளும தங்களோடு சிநேகிதமா யிருப்பவர்களுடைய கதைகளுமன்றி, வேறு காரணங்களொன்றையேனும் பேசக்கூடிய அறிவில்லாமையைக் கண்டு, அந்நாயகர்கள் வெளியேபோய் நேரத்தைப் போக்கவும் சிநேகிதர்களோடு கூடவும் துர்ச்செய்கைகளைச் செய்யவும், சூது விளையாட்டுகளுக்குப்போய் நேரத்தைக்கழிக்கவுந் தொடங்கி விடுவார்கள். தங்களுடைய மனைவிமார் அறிவும் ஆராய்வுமுள்ளவர்களாயிருந்தால், அவர்களுக்கு ஒப்பாக்கக்கூடிய சிநேகிதர் உலகத்தில் இரார். அவர்களுடனே பேசியிருக்கும் இன்பத்துக்குச் சரியான இன்பம வேறிராது.

ஆகையால், தாய்தகப்பன்மார் பெண்பிள்ளைகளுக்குக் கல்வியைக் கற்றுக்கொடாமல், அந்தப்பிள்ளைகளுக்கு செய்யும் அநியாயத்திற்காக மாப்பிள்ளைகள் இப்போது கேட்டுப் பிடித்துப் பறித்தெடுக்கிற சீதனம், நம்முடைய கருத்துக்குப் போதாது, அதுபோல நாலுபங் கதிகப்பட்டாலும் நியாயமே, இப்போது தாய் தகப்பன்மார் சீதனத்தைப்பற்றி அடையும் வருத்தந்தானும் போதாது நீங்கள் உங்களுடைய பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமலிருந்ததற்குக் கூலி இதுவே. இதைப்பற்றி இன்னும் எழுதுவோம்.